செ.வெ.எண்-37 நாள்-23.07.2021

# அரியலூர் மாவட்டம்
# நியூமோகோக்கல் நிமோனியா மற்றும் மூளை காய்ச்சல் தடுப்பூசி வழங்கும் பணிகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் பழைய நகராட்சி அலுவலகத்தில் சுகாதாரத்துறையின் சார்பில் நியூமோகோக்கல் நிமோனியா மற்றும் மூளை காய்ச்சல் தடுப்பூசி வழங்கும் பணிகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் இன்று (23.07.2021) நேரில் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் **திரு.கு.சின்னப்பா** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வளமான தமிழகத்தை உருவாக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் மருத்துவத் துறையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில், எதிர்கால தமிழகத்தின் தூண்களான குழந்தைகளின் நல வாழ்வை மேம்படுத்தும் வகையில் தேசிய தடுப்பூசி திட்டத்தின்கீழ் நியூமோகோக்கல் நிமோனியா மற்றும் மூளை காய்ச்சல் தடுப்பூசி வழங்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தொடங்கி வைத்துள்ளார்கள்.

5-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நோய்வாய்படவோ, மரணம் ஏற்படவோ நிமோனியா முக்கிய காரணமாக உள்ளது. எனவே, நிமோனியா காய்ச்சல்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் 3 தவணைகளாக நியூமோகோக்கல் காண்ஜிகேட் தடுப்பூசி வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்தடுப்பூசி 1 ½ மாதம் (6 வாரம்), 3 ½ மாதம் (14 வாரம்) உள்ள குழந்தைகளுக்கு முதன்மை டோஸாகவும், 9 மாதத்தில் உள்ள குழந்தைகளுக்கு பூஸ்டர் டோஜாகவும் தசை வழியாக வலது நடுத்தொடை பகுதியில் செலுத்தப்பட உள்ளது. 1-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இத்தடுப்பூசியினை கட்டாயமாக மூன்று தவணைகளாக செலுத்துவதன் மூலம் நுரையீரல் அழற்சி நோயால் (நிமோனியா) ஏற்படுகின்ற இறப்பு விகித்தை குறைக்கலாம். எனவே, குழந்தை பெற்ற தாய்மார்கள் அனைவரும் தங்களது குழந்தைகளை நிமோனியா காய்ச்சல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில் இந்த தடுப்பூசி முகாமினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, நகராட்சி ஆணையர் மனோகரன் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**